1968 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வொரு மாவட்டத்தலை நகரிலும் விளையாட்டு அரங்கங்கள் இருந்தால்தான் அந்த மாவட்டத்திற் குள்ளேயே அங்கங்கே போட்டிகள் நடத்தி, தலைநகரில் முடிவு விளை யாட்டை வைக்க முடியும். மேலும் இந்த அரங்கங்களை பள்ளிகளும், கல்லூரிகளும் கூடக் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதற்கான நிலங் களைக் கூட புறம்போக்கு நிலங்களாகப் பார்த்து எடுக்கப்படுகிறது. மேலும் புறம்போக்கு நிலங்களை ஒட்டியிருக்கக்கூடிய நிலங்களை இனமாக தனிப்பட்டவர்களிடத்தில் இருந்தும் பெறப்படுகிறது. மதுரையில் கூட ஒரு கிளப்புக்குச் சொந்தமான நிலத்தை அவர்கள் இனமாகத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுமக்கள் எல்லோரும் கலந்துகொள்கிற ஆண்டு விளையாட்டுப்போட்டி நடத்தி, மாநிலத்தில் இருந்தெல்லாம் சென் னைக்கே வந்து ஆண்டு விளையாட்டுப்போட்டி நடத்தி மக்களிடத்து நல்ல ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண் டும் என்பதுதான் கருத்தாகும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : மாவட்டத்தலைநகரங்களில் 25 லட்சம், 30 லட்சம் என்று விளையாட்டு மைதானம் ஏற்படுத்த கலெக்டர்கள் பஞ் சாயத்துக்களிடம் இருந்தெல்லாம் வசூல் செய்கிறார்கள். நாடு இன்றிருக்கிற ஏழ்மை நிலைமையில் இது அவசியம்தானா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவ்வளவு அதிகச் செலவு தேவையில்லை. 2 லட்சம், 3 லட்சம், 4 லட்சம் என்ற அடிப்படையில் தான் ஸ்டேடியம் அமைக்க மத்திய ஸ்போர்ட்ஸ் கவுன்சில் மூலம் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது வேலூரில்கூட மூன்று, நான்கு லட்சத் திற்குள்தான் திட்டமிட்டிருக்கிறார்கள். 25 லட்சம், 30 லட்சம் என்று திட்டமிட வேண்டிய அவசியமே இல்லை.

திரு. மா. பா. சாரதி : இப்போது வேலூரில் கட்டப்படுகிற ஸ்டேடியம் போலீஸ் க்ரவுண்டிலேயே கட்டப்படுகிறது. பொதுமக்களுக்குப் பயன்படுகிற வகையில் அதை வேறு இடத்தில் அமைத்து, ஸ்போர்ட்ஸ் கவுன்சிலிடம் ஒப்படைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுமக்களுக்குப் பயன் படுகிற வகையில்தான் அங்கே கட்டப்படுகிறது. எந்த இடத்தில் கட்டப் படுகிறது என்கிற விவரம் இல்லை. எங்கு கட்டப்பட்டாலும் பொதுமக்கள், ஸ்போர்ட்ஸ் கவுன்சில் சார்பாகவே கட்டப்படுகிறது.

கோவையில் மின்சார விபத்துக்கள்.

*179 வின.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் கோயமுத்தூரில் பல மின்சார விபத்துக்கள் நடந்து 3 பேர் மாண்டதும், பலர் காயம்பட்டதும், அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், இவ்வித அபாயங்களைத் தடுக்க என்ன பரிகாரம் மேற்கொள்ளப்பட்டது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) மூன்று மரண விபத் துக்கள் உட்பட, ஐந்து மின்சார விபத்துக்கள் நேரிட்டதாக அரசாங்க மின் சாரத் தலைமை ஆய்வாளருக்கு அறிவிக்கப்பட்டது.

(இ) பாதுகாப்பு முன் எச்சரிக்கைகளின் முக்கியத்துவமும் அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய அவசியமும் மின்சாரத்துறை ஊழியர் களுக்கும் பொதுமக்களுக்கும் வலியுறுத்தப்பட்டன. இவ்விபத்துக்களுக் குப் பொறுப்பானவர்களை நகராட்சி மின்சாரப் பொறியாளர் தண்டித் துள்ளார்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏற் படுகின்ற விபத்துக்களுக்குக் காரணமானவர்கள் அவற்றை நிர்வகிக்கின்ற பொறியாளர்களே. பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அங்

இருக்கிற ஊழியர்களை சஸ்பெண்டு செய்வது போன்ற நடவடிக்கையை எடுக்கிறார்களே, அதை மாற்றி பொறியாளர்களின்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆங்காங்கு ஏற்படுகிற தவறுகளுக்கு யார் காரணமாக இருக்கிறார்களோ அவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இங்கு ஏற்பட்டுள்ள ஐந்து விபத்துக்களில் ஒன்றில் பொறியாளர் சஸ்பெண்டு செய்யப்பட்டு, செகண்டு கிரேடு சூப்பர் வைசராகத் தள்ளப்பட்டிருக்கிறார். ஆக, விபத்துக்கு யார் காரணமோ அவர்கள் தான் சஸ்பெண்டு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, தண்டிக் கப்படுகிறார்கள்.

மு.ப. 9 30 **திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த மின் விபத்துக் களால் உயிரிழக்கக்கூடியவர்கள் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கப் படுகிறதா, அது எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மின் சாரத் துறையில் விபத்துக்குள்ளாகிறவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு முறைகள் வைத்திருக்கிறார்கள். அவற்றைப்பற்றிய முழு விவரங்கள் இல்லை. இருக்கின்ற விதி முறைகளின்படி நஷ்ட ஈடு தருகிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இதிலே மாண்டவர்கள் 3 பேர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக் கிறதா ? அவர்கள் மின்சார இலாகாவில் வேலை செய்தவர்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூன்று பேர்கள் மாண் டார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மின்சார இலாகா விலே வேலை செய்தவர்கள். நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா இல்லையா என்பதுபற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மின்சார இலாகாவில் பணிபுரியக் கூடியவர்கள் விபத்துக்குள்ளானால் நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. ஆனால் பொதுமக்கள் பாதையிலே போகக்கூடிய சமயத்திலே எதிர்பாராத வித மாக விபத்துகளுக்குள்ளானால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுவது இல்லையே, அவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்பது தெரியவில்லை. அதுபற்றி தக்க வகையில் ஆராயலாம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்த விபத்திலே மாண்டவர்களின் சரித்திரம் என்ன ? அவர்களுக்குப் பிள்ளைகுட்டிகள் எவ்வளவு, அவர் களுடைய சர்வீஸ் என்ன என்றெல்லாம் அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பு வந்திருக்குமே, அந்தக் குறிப்பின்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிலே ஒருவர் இறந்து பட்டிருக்கிறார். இன்னொருவர் தெரியாத்தனமாக பியூஸை மாட்டிவிட்ட தன் காரணமாக விபத்துக்குள்ளாக நேரிட்டது. அதற்குக் காரணமாக இருந்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தின ருக்கு நஷ்ட ஈடு எவ்வளவு தரப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம். அதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. யார் யார் அதற்குப் பொறுப்போ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. அந்த வகையிலேதான் ஜூனியர் எஞ்சினியராக இருந்த வரை சஸ்பெண்ட் செய்து கிரேடு 2 சூப்பர்வைசராகப் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் 180, 181, 183 அமைச்சரின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படுகின்றன.